# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தொலைபேசி - சமூக வலைதளங்கள் - கடிதங்கள் - நேரிலும் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தோர் விபரம்!

சென்னை, மார்ச் 3 -

தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளையொட்டி நேரிலும், தொலைபேசி வாயிலாகவும், சமூகவலைதளங்கள் வாயிலாகவும், கடிதம் மூலமாகவும் பிறந்தநாள் வாழ்த்துகள் தெரிவித்த முக்கிய பிரமுகர்களின் விவரங்கள் வருமாறு:-

இந்திய குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இந்திய குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் ஆகியோர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்ததோடு, தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.

டிவிட்டர் வாயிலாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

அத்துடன், டிவிட்டர் வாயிலாக மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, ஒன்றிய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஒன்றிய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நிதின் கட்கரி, ஒன்றிய பாராளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, ஒன்றிய விமான போக்குவரத் துறை அமைச்சர் ராம்மோகன் நாயுடு, ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவரும், மக்களவை எதிர்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாகவும் டிவிட்டர் வாயிலாகவும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் ஆகியோர் தொலைபேசி வாயிலாகவும், டிவிட்டர் வாயிலாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி முதலமைச்சர் அவர்களுக்கு வாழ்த்து கடிதம் மற்றும் மலர்கொத்து அனுப்பி வைத்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

மகாராஷ்டிரா மாநில ஆளுநர் சி.பி. ராதாகிருஷ்ணன் தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ட்விட்டர் வாயிலாக கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன், ஆந்திர மாநில துணை முதலமைச்சர் பவன் கல்யாண் ஆகியோர் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

டிவிட்டர் மூலமாக பீகார் மாநில முன்னாள் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சசிதரூர், திருமதி சுப்ரியா சுலே, முன்னாள் ஒன்றிய அமைச்சர் சச்சின் பைலட், முன்னாள் ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தரராஜன், பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ், தலைவர் டாக்டர் அன்புமணி இராமதாஸ், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய், சட்டமன்ற உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், மாநிலங்களவை உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினரு மான ராஜீவ் சுக்லா, முன்னாள் ஒன்றிய அமைச்சரும், மக்களவை உறுப்பினருமான கே.சி. வேணுகோபால், பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை, தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தவர்கள் வருமாறு:-

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்ததோடு, தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

மேற்குவங்க முதலமைச்சர் செல்வி. மம்தா பானர்ஜி, உத்தரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

உலக தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் பழ. நெடுமாறன் , தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே. வாசன் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் மூலம் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தனர்.

நடிகர் எஸ்.வி. சேகர், முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

டாக்டர் அகர்வால் கண்மருத்துவமனை இயக்குநர் ஆதித்யா அகர்வால், முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, அகர்வால் கண் மருத்துவமனையில் இன்றைய தினம் 100 ஏழை மக்களுக்கு இலவச கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது என்பதை கடிதம் மூலம் தெரிவித்து முதலமைச்சர் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்தினை தெரிவித்தார்.

கூட்டணி கட்சித் தலைவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கு. செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் கே. பாலகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே. காதர் மொய்தீன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் தொல். திருமாவளவன், நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, கொங்குநாடு மக்கள் கட்சி பொதுச் செயலாளர் திரு.ஈ.ஆர். ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியன், மூவேந்தர் முன்னேற்றக் கழக தலைவர் ஜி.எம். ஸ்ரீதர் வாண்டையார், தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன். குமார், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிகோ இருதயராஜ், சமத்துவ மக்கள் கழகத்தின் தலைவர் எர்ணாவூர் நாராயணன், மக்கள் விடுதலை கட்சி நிறுவனத் தலைவர் சு.க. முருகவேல்ராஜ், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமீமுன் அன்சாரி, முக்குலத்தோர் புலிப்படை தலைவர் கருணாஸ், ஆதித்தமிழர் பேரவை நிறுவனர் அதியமான், ஆம் ஆத்மி கட்சியின் மாநிலத் தலைவர் வசீகரன், தமிழ் மாநில தேசிய லீக் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப், அகில இந்திய வல்லரசு பார்வர்டு பிளாக் பி.என். அம்மாசி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா;

தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள்;

புதுச்சேரி முன்னாள் முதலமைச்சர்கள் வி. நாராயணசாமி மற்றும் வைத்தியலிங்கம், எம்.பி., புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள்;

காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற கட்சித் தலைவர் ராஜேஷ் குமார், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர்கள் திருநாவுக்கரசர் மற்றும் எம். கிருஷ்ணசாமி; டி.வி.எஸ். குழுமத்தின் தலைவர் வேணு சீனிவாசன், நல்லி குப்புசாமி, அகில இந்திய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் (AIRF) தலைவரும், தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான என். கண்ணையா, டாக்டர் மோகன் காமேஸ்வரன், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் ஜோ. அருண், எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன்;

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி. ராஜமாணிக்கம், முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் இறையன்பு (ஓய்வு), காவல்துறை முன்னாள் தலைமை இயக்குநர் சைலேந்திர பாபு (ஓய்வு);

மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் தவத்திரு அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீராமனுஜ எம்பார் ஜீயர் சுவாமிகள்; அய்யா வழி ஸ்ரீ பாலபிரஜாபதி அடிகளார் அவர்கள் முதலமைச்சர் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

சாந்தோம் பேராலயத்தின் பங்குத் தந்தை வின்செண்ட் சின்னதுரை, பல் மருத்துவர் பாலாஜி, தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஆர். தங்கம் மற்றும் சங்க நிர்வாகிள், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் நிர்வாகிகள்;

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்கள் முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார். திரைப்பட நடிகர் சத்யராஜ் முதலமைச்சர் அவர்களை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டும், காணொலி வாயிலாகவும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.





